# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/68 - 2018 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2018.11.09

*2096/68 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 ஆவது உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களுக்கு ஒப்படைக்கப்படும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் ஆகியவை தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலால் ;

அவ் அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் என்பன இவ்வறிவித்தல் வெளியாகும் திகதியிலிருந்து, கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு அமைந்திருக்குமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மைத்திரிபால சிறிசேன,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 09.


1A - G 28907 — 377 (2018/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

### (1) பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சர்

#### நிரல் I

*கடமைகளும் பணிகளும்*

1. பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்
2. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளின் நிர்வாகமும் ஆளணி முகாமையும் :
    - இலங்கை நிருவாக சேவை
    - இலங்கை கணக்காளர் சேவை
    - இலங்கை திட்டமிடல் சேவை
    - இலங்கை பொறியியல் சேவை
    - இலங்கை விஞ்ஞான சேவை
    - இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை
    - இலங்கை தொழில்நுட்ப சேவை
3. இணைந்த சேவைகளின் நிருவாகம்
4. தாபன விதிக்கோவையின் கீழான பணிகள்
5. அரசாங்க சேவைப் பயிற்சி
6. தேசிய உற்பத்தித்திறனை உயர்த்தும் நோக்கில் கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்தலும் செயற்படுத்துதலும்
7. ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பை செயற்படுத்தல்
8. அரசாங்கத்தின் சகல ஓய்வூதியத் திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளும்

#### நிரல் II

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்
2. டிஸ்டன்ஸ் லேர்னிங் சென்டர் லிமிட்டெட்
3. ஓய்வூதியத் திணைக்களம்
4. அரச சேவையின் ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
5. தேசிய உற்பத்தித்திறன் செயலகம்
6. சகல மாவட்டச் செயலகங்களும்
7. சகல பிரதேச செயலகங்களும்
8. பதிவாளர் நாயகம் திணைக்களம்
9. சட்டமா அதிபர் திணைக்களம்
10. சட்ட வரைஞர் திணைக்களம்
11. கடன் நிவாரண சபைத் திணைக்களம்
12. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்
13. உயர்நீதிமன்றப் பதிவாளர் அலுவலகம்
14. இலங்கை சட்ட ஆணைக்குழு
15. உயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி முகாமைச் சபை
16. இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு
17. மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
18. சட்டக் கல்விச் சபை

#### நிரல் III

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (1961 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க) கட்டாய பகிரங்க சேவைச் சட்டம்
- (1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டம்
- (1983 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டம்
- (1898 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) விதவைகள், அநாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம்
- (1998 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க) தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள் (ஆயுதந் தாங்கிய படைகள்) சட்டம்
- (1970 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டங்கள் (ஆயுதந் தாங்கிய படைகள்) சட்டம்
- (1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) அரச சேவையின் ஓய்வூதியம் பெறுவோர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்
- (1969 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) அரசாங்க விடுதிகள் (உடைமையை மீளப்பெறுதல்) சட்டம்
- (1942 ஆம் ஆண்டின 18 ஆம் இலக்க) பகிரங்க சேவை சேமலாப நிதிய கட்டளைச் சட்டம்
- (1957 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) பரிசளிப்புப் போட்டிகள் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(1) பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

9. உத்தேச அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அரச துறையினுள் நல்லாட்சியை மேம்படுத்தல்

10. நவீன நல்லாட்சி எண்ணக்கருக்களை அறிமுகப்படுத்துதல்

11. மக்கள் சேவைகளுக்கு முன்னுரிமை வழங்கும் அரச சேவையினை ஏற்படுத்துவதற்காக கொள்கைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்

12. அரச விழாக்களை ஏற்பாடு செய்தல்

13. கிராமங்கள் அடிப்படையிலான அரச மையங்களின் எல்லைகளை நிர்ணயித்தல்

14. கிராமங்கள் அடிப்படையில் அரசாங்கத்தை மையமாகக் கொண்ட சபையினைத் தாபித்தல்

15. மாவட்ட அபிவிருத்தி கூட்டிணைப்புச் சபையை நிறுவுதல்

16. பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு என்பவற்றைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள்

17. அரசியலமைப்பின் மூலம் வேறெவரிடத்தும் சாட்டப்பெறாத நீதி நிருவாகம் தொடர்பான நீதிமன்றங்களின் நிருவாக அலுவல்கள்

18. சமூகத்தேவைகள் மற்றும் உலகளாவிய போக்குகளைக் கவனத்தில் கொண்டு சட்ட முறைமைக்குத் தேவையான சீர்திருத்தங்களைச் செய்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

19. நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

20. இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம்

21. இலங்கை இன்டர்நஷனல் ஆர்பிறேஷன் சென்ரர் (கரன்டி) லிமிட்டெட்

22. சிறைச்சாலைகள் திணைக்களம்

23. சமூக அடிப்படையிலான சீர்திருத்தத் திணைக்களம்

24. இளந்தவறாளிகளுக்கான பயிற்சிப் பாடசாலைகள்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க) தத்துவங்களைக் கைமாற்றுதல் (பிரதேசச் செயலாளர்கள்) சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் கட்டளைச் சட்டம்
- (1952 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) மலைநாட்டு விவாக மற்றும் மண நீக்கற் சட்டம்
- (1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) முஸ்லிம் விவாக, மண நீக்கற் சட்டம்
- (1907 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) நொத்தாரிசுகள் கட்டளைச் சட்டம்
- (1927 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டம்
- (1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) சாதாரண விவாகப் பதிவு கட்டளைச் சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க) விடுமுறைகள் சட்டம்
- (1987ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி முகாமை சபைச் சட்டம்
- (2001ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) சர்வதேச சிறுவர் கடத்தலின் குடியியல் துறைகளுக்குரிய சமவாயச் சட்டம்
- (1974 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க) சட்ட கல்வி சபைச் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(1) பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |

*நிரல் I*

*19. நீதிமன்ற முறைமைக்குள் நீதி நிருவாகத்தில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்தலும் ஒட்டுமொத்த நிருவாகத்துடன் தொடர்புடைய சகல பணிகளையும் முறையாகவும் வினைத்திறமையுடனும் நிறைவேற்றுதலும்*

*20. அரசாங்கம் சார்பாக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்தலும் சிவில் சட்ட நடவடிக்கைகளும்*

*21. அரசுக்கும் சகல அரச திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல்*

*22. சட்ட வரைவுகளை தயாரித்தல்*

*23. யாதேனுமொரு குற்றவாளிமீது விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மன்னிப்பளித்தல், குறித்த தண்டனையைக் குறைத்தல், தளர்த்துதல், தாமதித்தல், இடைநிறுத்தல் ஆகியன தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்*

*24. ஒட்டுமொத்த குவாசி முறைமையின் உற்பத்தித் திறனையும் வினைத்திறமையையும் உயர்த்துவதற்காக தகுந்த வேலைத்திட்டமொன்றை வகுத்தமைத்தலும் நடைமுறைப்படுத்தலும்*

*25. தொழில் நியாய சபைகளின் நிருவாகமும் அது தொடர்பான ஏனைய பணிகளும்*

*26. சட்டத்தை மீள் ஆவணப்படுத்தலும் கோவைப்படுத்துதலும்*

*27. (2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) குற்றச் செயல்களில் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்துக்குரிய சகல விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுத்தல்*

*நிரல் III*

- *(1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) கடன் நிவாரண சபைக் கட்டளைச் சட்டம்*
- *(1956 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) வெளிநாட்டு வழக்குத் தீர்ப்புக்களை வலுப்படுத்தல் கட்டளைச் சட்டம்*
- *(1988 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் (பண்டங்களை அகற்றுதல்) சட்டம்*
- *(1990 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) மாகாண மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*
- *(1978 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) கூட்டுத்தாபன வழக்குரைஞர் நிறுவகச் சட்டம்*
- *(1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) நீதித்துறை ஏற்பாட்டுச் சட்டம்*
- *(1961 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) நீதிமன்ற மொழிச் சட்டம்*
- *(1969 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க) சட்ட ஆணைக்குழுச் சட்டம்*
- *(1978 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) சட்ட உதவிச் சட்டம்*
- *(1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க) மத்தியஸ்த சபைகள் சட்டம்*
- *(1840 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) மோசடி தவிர்த்தல் கட்டளைச் சட்டம்*
- *(1957 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) சமூக இயலாமை தவிர்த்தல் சட்டம்*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(1) பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 28. சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்குரிய கொள்கைகளையும், திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் | | • (1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) ஆரம்ப நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டம் |
| 29. சிறைச்சாலை நிருவாகமும் மறுசீரமைப்பும் | | • (1969 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) அரசாங்க (சிவில் குற்றங்களுக்கான பொறுப்புக்கள்) சட்டம் |
| 30. சமுதாய சீர்திருத்தக் கருத்திட்டங்கள் தொடர்பான அலுவல்கள் | | • (1926 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) குற்றவியல் தவிர்த்தல் கட்டளைச் சட்டம் |
| 31. பாராளுமன்றத்திற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களது அலுவல்களுக்கும் உரியதாக அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் | | • குவாசி நீதிமன்ற (நியமனங்களைச் செல்லுபடியாக்கல்) சட்டம் |
| 32. பாராளுமன்ற உறுப்பினர்களின் தாபன ரீதியானதும் ஒழுக்க ரீதியானதுமான விடயங்களைக் கூட்டிணைத்தல் | | • (1922 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க) நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் |
| 33. பாராளுமன்ற உறுப்பினர்களின் பணியாட்டொகுதியினர் தொடர்பான தாபன அலுவல்கள் | | • (2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) குற்றச் செயல்களில் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் |
| 34. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் நலனோம்புகைசார் அலுவல்கள் | | • (2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையச் சட்டம் |
| 35. பாராளுமன்றக் கண்காணிப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் | | • (1877ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம் |
| 36. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | • (1939 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) சட்டம் |
| 37. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(2) சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 1. சர்வதேச வர்த்தக மற்றும் முதலீட்டு மேம்பாடு விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக் களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. இலங்கை முதலீட்டுச் சபை | • (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் (முதலீட்டுச் சபைச் சட்டம்) |
| 2. முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தயாரித்தல் | 2. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | • இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) |
| 3. இலங்கையினுள் பொருளாதார வாய்ப்புக்களை ஊக்குவித்து நேரடி யான வெளிநாட்டு முதலீடுகளையும் தனியார் துறையின் முதலீடுகளையும் ஊக்குவித்தல் | 3. இறக்குமதி, ஏற்றுமதித் திணைக்களம் | • (1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) இறக்குமதி ஏற்றுமதிச் சட்டம் |
| 4. உள்நாட்டு உற்பத்திகளுக்காக சர்வ தேச சந்தை வாய்ப்பை விரிவாக்கும் திறமுறைகளை வகுத்தமைத்தல் | 4. வர்த்தகத் திணைக்களம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித் துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 5. சர்வதேச வர்த்தக உறவுகளை வலுப் படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல் | | |
| 6. பிராந்திய பொருளாதார ஒத்து ழைப்பை உயர்த்தும் நோக்கிலான கொள்கைகள், உபாயமுறைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத் திட்டங்கள் என்பவற்றை வகுத்த மைத்தல் | | |
| 7. பல்தரப்பு மற்றும் இருதரப்பு பொரு ளாதார சமவாயங்கள் தொடர்பான பணிகள் | | |
| 8. பொருளாதார அபிவிருத்தி வலயங் களை ஊக்குவித்தலும் ஒழுங்குறுத் தலும் கண்காணித்தலும் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(2) சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 9. ஏற்றுமதி பல்வகைப்படுத்துகையை ஊக்குவித்தலும் ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஆலோசனைச் சேவைகளைச் செயற்படுத்தலும் | | |
| 10. வெளிநாடுகளில் இலங்கை வர்த்தக அலுவல்களை பிரதிநிதித்துவப்படுத்தல் | | |
| 11. வர்த்தகக் கண்காட்சிகளை நடாத்துதல் | | |
| 12. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | |
| 13. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(3) வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 1. வீடமைப்பு, சமூக நலன்புரி மற்றும் சமூக வலுவூட்டல் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் ,அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>2. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை<br>3. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை (பொது வசதிகள் சபை)<br>4. வீடமைப்புத் திட்டமிடலும் கட்டிட நிலையமும்<br>5. கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் | • (1979ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இருப்பிடக்கூறு உரிமைகள் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(3) வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 2. அரசாங்க உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கான நியமங்களையும் தராதரங்களையும் விதித்துரைத்தல் | 6. கட்டடத் திணைக்களம்<br>7. அரசாங்க தொழிற்சாலை<br>8. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை<br>9. அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | • (1999 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்<br>• (1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) பொது வசதிகள் சபைச் சட்டம் |
| 3. குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் விசேட பிரசைக் குழுக்கள் உட்பட பொதுமக்களின் வீடமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதிசார் திட்டங்களையும் செயற்படுத்துதல் | 10. அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனம்<br>11. வரையறுக்கப்பட்ட டெவ்கோ சோவா தனியார் கம்பனி | • (2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்<br>• (1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டம் |
| 4. சூழல் நேயமிக்க செலவுக்கேற்ற நன்மையளிக்கும் வீடமைப்பு தொழில் நுட்ப முறைகள் பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டல் | 12. தேசிய உபகரணங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் அமைப் பாண்மை | • (1907 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) தடுப்பு இல்லங்கள் கட்டளைச் சட்டம் |
| 5. பிரதானமாக அரசாங்க நிறுவனங் களுக்கு பொறிசார் பொறியியல் சேவைகளை வழங்குதல் | 13. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்<br>14. சமூக சேவைகள் திணைக்களம் | • (1939 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க) வறியோர் சட்ட கட்டளைச் சட்டம் |
| 6. தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கும் தரவளவு களுக்கும் ஏற்றதாக கட்டுமானக் கைத்தொழில் துறையின் பணிகளை ஒழுங்குபடுத்தலும் பதிவு செய்தலும் விதிமுறைப்படுத்தலும் தரப்படுத் தலும் | 15. வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய மன்றமும் தேசிய வயது முதிர்ந்தோர் செயலகமும்<br>16. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய பொதுச் செயலகம்<br>17. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய மன்றம் | • (2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்<br>• (1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) வலுவிழந்த ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்<br>• (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம் |
| 7. நிர்மாணக் கைத்தொழிலுக்கான மதி யுரைகளையும் ஒழுங்குறுத்துகைச் சேவைகளையும் வழங்கலும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்கு தலும் பராமரித்தலும் தொடர்பான பயிற்சி அளித்தலும் | 18. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்<br>19. திவி நெகும அபிவிருத்தித் திணைக் களம்<br>20. கிராம அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் | • (1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கட்புலன் இழந்தோர் புனர் வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்<br>• (1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகச் சட்டம் |
| 8. கூட்டாட்சி முகாமையும் ஒழுங்கு றுத்துகைப் பணிகளும் | 21. சமூக பாதுகாப்புச் சபை | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(3) வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

9. மக்கள் கூட்டாட்சி மறுசீரமைப்பும் வினைத்திறனுடனும் துரிதமாகவும் வீடுகளின் உரித்தை உரிமை மாற்றம் செய்தலும்

10. விசேட தேவையுடையவர்களின் இயலாமை நிலைமைகளை இனங் காணல் மற்றும் புனர்வாழ்வளித்தல்

11. மக்கள் உதவித்தொகை திட்டங்களை மீளாய்வு செய்தலும் மீள்ஏற்பாடு செய்தலும் தகுந்த புதிய சீர்திருத் தங்களை அறிமுகப்படுத்தலும்

12. சயரோகம், சிறுநீரக நோய், தொழு நோய், புற்றுநோய், தெலிசீமியா போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர் களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோ ருக்கும் உதவுதல்

13. குடும்ப ஆலோசனை சேவைகளை நடைமுறைப்படுத்துதல்

14. வலதுகுறைந்த ஆட்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சியளித் தலும், வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக தேவையான உபாயமுறைகளைத் திட்டமிடுதலும்

15. வலதுகுறைந்த ஆட்களுக்கான சமூகக் காப்புறுதித் திட்டங்களைச் செயற் படுத்துதல்

16. வயது முதிர்ந்த ஆட்களின் நலக் கவனிப்பும் சமூக அபிவிருத்திப் பணிகளில் முதியோரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தலும் சிரேஷ்ட பிரசைகளின் உரிமைகளைப் பாது காப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) திவி நெகும சட்டம்
- (1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) வறுமை நிவாரணச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சமூக பாதுகாப்புச் சபைகள் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்து ரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(3) வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| *17. கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை வலுவூட்டுவதற்காகத் திறமுறைகளை அறிமுகப்படுத்தலும் அவற்றை செயற்படுத்துவதற்கு நிதியுதவி வழங்குதலும்* | | |
| *18. கிராமிய மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளை திட்டமிடுதல்* | | |
| *19. கிராமப்புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்* | | |
| *20. திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல்* | | |
| *21. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்* | | |
| *22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்* | | |

***(4) புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| *1. புத்தசாசன, மத அலுவல்கள், இளைஞர் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்* | *1. பௌத்த அலுவல்கள் திணைக்களம்*<br>*2. புத்தசாசன நிதியம்*<br>*3. சர்வதேச பௌத்த நிலையங்கள்*<br>*4. இலங்கை மகளிர் பணியகம்*<br>*5. மகளிர் தொடர்பான தேசிய குழு*<br>*6. நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்* | • *புத்த சாசன நிதியச் சட்டம் (1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)*<br>• *(1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) பௌத்த அறநிலையங்கள் கட்டளைச் சட்டம்*<br>• *(2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) வீட்டு வன்முறைகள் தவிர்ப்புச் சட்டம்* |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(4) புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. ஒழுக்கப் பண்பாட்டு ரீதியான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மக்களிடையே சமயரீதியிலான விழுமியங்களை விருத்தி செய்வதன் பொருட்டு கொள்கைகளையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்

3. பௌத்த சமயத்தைப் பாதுகாத்து, போசித்து ஊக்குவிப்பதற்காக தகுந்த நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் செயற்படுத்துதல்

4. பௌத்த சாசனத்தை பாதுகாத்து, போசிப்பதற்காக உகந்த நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தல்

5. பௌத்த சமய அலுவல்கள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வும்

6. புனிதபூமி திட்டமிடுதலும் அபிவிருத்தி செய்தலும்

7. மேலறிவுரை மன்றத்தின் தேவைகளை நிறைவேற்றல்

8. சர்வதேச ரீதியில் தேரவாத பௌத்த சமயத்தை பிரசாரம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல்

9. நேபாளத்தில் அமைந்துள்ள இலங்கைக்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள லும்பினி புனிதபூமியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள்

10. மகளிர் வாழ்வின் பண்புத்தரத்தை உயர்த்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

7. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

8. சிறுவர் செயலகம்

9. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

10. இளைஞர் படையணி

11. தேசிய இளைஞர் விருது வழங்கல் அதிகாரசபை

12. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு நிறுவனம்

13. தலைமைத்துவ அபிவிருத்தி தொடர்பான தேசிய மத்திய நிலையம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம் (1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க)
- (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்
- (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்
- (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவைப் பேரவைச் சட்டம்
- (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(4) புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 11. அரசாங்க அலுவல்களின்போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுள் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும் | | |
| 12. மோதல்களினாலும் வறுமையினாலும் விபத்துக்குள்ளான குழுக்களை முக்கிய நோக்காகக்கொண்டு பெண்களை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தலும் ஆண், பெண் இருதரப்புக்கிடையே சமநிலையையும் நியாயத்தையும் ஏற்படுத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை எடுத்தலும் | | |
| 13. மகளிர் மற்றும் சிறுவர் மீதான துன்புறுத்தல்களை தவிர்ப்பதற்காக சட்ட மற்றும் கொள்கைகளை வலுவூட்டுவதும் செயற்படுத்துதலும் | | |
| 14. மகளிரை அடிப்படையாகக் கொண்ட வீட்டு அலகுகளைப் பலப்படுத்துவதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தலும் நடைமுறைப்படுத்துதலும் | | |
| 15. நிலைபேறான அபிவிருத்தி அபிலாஷைகளை நிறைவேற்றல் | | |
| 16. மகளிர் பட்டயத்தை நடைமுறைப் படுத்துதல் | | |
| 17. உடல், உள ரீதியான ஆரோக்கியமுள்ள ஒரு பிள்ளையை உருவாக்கும் நோக்குடன் முன் சிறுவர்பராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தலும், மாகாண மட்டக் குழுக்களுடன் அத்தகைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும், தொடர்பினைத்தலும் மற்றும் தொடராய்வும் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(4) புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 18. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளை தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இயைபானவாறு உயர்ந்த மட்டத்தில் வைத்துப் பேணுவதுடன், அத்தகைய சிறுவர்களுக்கு சமவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும் | | |
| 19. சிறுவர் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல் | | |
| 20. சிறுவர் பாதுகாப்பு நிலையங்களின் ஒழுங்குறுத்துகை | | |
| 21. செவண சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் | | |
| 22. இளைய பரம்பரையினர் சரியான திசையில் செல்வதை நோக்காகக் கொண்ட எண்ணங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் செயற்படுத்துதலும் | | |
| 23. இளந் தலைமுறையினரை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | | |
| 24. வேலையற்ற இளைஞர்கள் மத்தியிலுள்ள திறனை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல் | | |
| 25. இளைஞர் அமைப்புகள் தொடர்பான செயற்பாடுகள் | | |
| 26. இளைஞர் சமூகத்தினை இலக்காகக் கொண்ட தொண்டர் சேவைத் திட்டங்களை வகுத்தமைத்தல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(4) புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
| 27. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | |
| 28. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(5) தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
| 1. தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. தபால் திணைக்களம் | • (1909 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க) முத்திரைக் கட்டளைச் சட்டம் |
| 2. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தபால் சேவைப் பணிகள் | 2. ஸ்ரீ லங்கா ரெலிகொம் கம்பனியும் அதன் துணைக் கம்பனிகளும் இணை நிறுவனங்களும் | • (1908 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டம் |
| 3. புதிய தொழில்நுட்பத்தையும் முகாமைத்துவ திறமுறைகளையும் கையாண்டு பல்முறைகளின் மூலம் வியாபாரங்களை நோக்காகக் கொண்ட புதிய தபாற் சேவையை வழங்குதலும் அதை வினைத்திறன் மிக்கதாகப் பேணுதலும் | 3. தொலைத்தொடர்புகள் திணைக்களம் (ஒழிவுக்குட்பட்ட நிலையில் உள்ளது) | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்கள் |
| 4. வேறு திணைக்களங்களுடனான முகவராண்மைக் கொடுப்பனவு அலுவல்களை மேற்கொள்ளுதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(5) தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 5. இலங்கை முத்திரைப் பணியகத்தின் நிருவாகம் | | |
| 6. புதிய தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி அனைவருக்கும் தொலைத் தொடர்பு வசதிகளை வழங்குவதற் குரிய நடவடிக்கை எடுத்தல் | | |
| 7. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவ னங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும் | | |
| 8. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**(6) தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 1. தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி தொடர்பான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங் களையும் கருத்திட்டங்களையும் வகுத் தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. தொழில் திணைக்களம்<br>2. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்<br>3. ஊழியர் சேமலாப நிதியம்<br>4. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்<br>5. தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | • ஊழியர் பேரவைகள் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)<br>• ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் (1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)<br>• (1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) பெண்களையும் இளம் ஆட்களையும் சிறுவர்களையும் வேலைக்கமர்த்துதல் சட்டம் |
| 2. சர்வதேச தொழிலாளர் நியமங்கள், பதவியணி நிர்வாகம் மற்றும் நலன் புரி சம்பந்தமாக கொள்கைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும் | 6. சிரம வாசனா நிதியம்<br>7. மனிதவலு மற்றும் தொழில்துறை திணைக்களம் | • தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் (1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(6) தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

3. சர்வதேச தொழிலாளர் அமைப்பாண்மை, சர்வதேச சமூகப் பாதுகாப்பு அமைப்பாண்மை ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை பேணுதல்
4. ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வுறுத்தல் திட்டம் ஆகியவற்றை நிர்வகித்தல்
5. தொழில்நுட்ப உறவுகளும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தலும்
6. தொழில் உறவுகளுக்குரிய சட்ட திட்டங்களைத் தயாரித்தலும் ஒழுங்குறுத்தலும்
7. தொழில்சார் மற்றும் தொழில்துறை வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
8. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தலும் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் அனைத்துத் தொழிற்சங்கங்களதும் அலுவல்களை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் பொருட்டுத் தேவையான சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலும் நடைமுறைப்படுத்தலும்
9. தேசிய மனிதவலு மற்றும் தொழில்துறைக் கொள்கைகளைச் செயற்படுத்துதல்
10. தொழில் நிறுவனங்களினால் கட்டணங்கள் அறவிடப்படுவதை ஒழுங்குறுத்தல்
11. தொழில்வாய்ப்பின்மை நலன் காப்புறுதித் திட்டங்களுடன் தொடர்புடைய பணிகள்
12. தொழில்சார் வழிகாட்டி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

8. வரையறுக்கப்பட்ட லங்கா ரெக்கியா பியஸ
9. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்
10. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்
11. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராண்மை
12. இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனம்
13. வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் களஞ்சியத் தொகுதி
14. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பணியகம்
15. வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனி

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- கைத்தொழிற் பிணக்குகள் சட்டம் (1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க)
- பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம் (1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)
- (2009 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவகச் சட்டம்
- பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம் (1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க)
- சாப்புகள் மற்றும் அலுவலக ஊழியர் (தொழிலையும் வேதனத்தையும்) விதிமுறைப்படுத்தல் சட்டம் (1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)
- (1998 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க) சிரம வாசனா நிதியச் சட்டம்
- தொழிலாளிகளின் தொழிலை முடிவுறுத்துதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க)
- தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டம் (1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க)
- (1941ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க) சம்பள நிர்ணய சபைகள் கட்டளைச் சட்டம்
- (1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) தொழிலாளர் நட்டஈட்டுச் கட்டளைச் சட்டம்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(6) தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |

13. புலம்பெயர் ஊழியர்களின் தொழில் சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கலும் நலனோம்புகையை மேம்படுத்தலும்

14. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்குச் செல்லும் ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக வேண்டிய புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துதல்

15. வேலைவாய்ப்பு முகவராண்மைகளின் ஒழுங்குறுத்துகையும் மேற்பார்வையும்

16. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக தொழில் ரீதியான வழிகாட்டல்களை வழங்குதல்

17. பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள், இயற்கை வாயு என்பனவற்றின் இறக்குமதி, சுத்திகரிப்பு, களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் விற்பனை

18. பெற்றோலிய உற்பத்தியும் சுத்திகரிப்புத் தொடர்பான பணிகளும்

19. பெற்றோலிய ஆராய்ச்சி சம்பந்தமான நடவடிக்கைகள்

20. பெற்றோலிய உற்பத்திகள் முதலிய வளமூலங்களிலிருந்து வாயு உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும்

21. எரிபொருள் வழங்கலும் விநியோகம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியும்

22. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்

23. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

- (1956 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) கட்டணங்களை அறவிடும் முகவராண்மைகள் சட்டம்
- (1993 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்
- (1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகச் சட்டம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மைச் சட்டம் (1980 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)
- வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனச் சட்டம் (1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க)
- பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி சட்டம் (2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க)
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

## *(7)* **கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர்**

### *நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

1. கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும்
2. கைத்தொழில் ஊக்குவிப்பும் அபிவிருத்தியும்
3. இலங்கையில் கைவினைக் கைத்தொழில் உற்பத்திகளுக்கான வடிவமைப்பு அபிவிருத்தி மற்றும் பிரபல்யப்படுத்தல்
4. அரச தொழில்முயற்சித் துறையினுள் புதிய அறிவினையும் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்திக் கொடுக்கத் தேவையான வசதிகளை அளித்தல்
5. அரச தொழில்முயற்சியாளர்களதும் உற்பத்திகளதும் தரம் மற்றும் பண்பு சார் தன்மையையும் மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
6. தொழில்முயற்சியினை தேசியப் பொருளாதார முன்னெடுப்புடன் இணைப்பதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்
7. வளங்களை உற்பத்திப் பெருக்கத்துடன் உபயோகிப்பதனூடாக உள்நாட்டு தொழில்முயற்சிகளை தேசியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

### *நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

1. இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகங்களும்
2. நெசவுக் கைத்தொழில் திணைக்களம்
3. கஹட்டகஹ கிராபைட்
4. லங்கா லேலண்ட் லிமிட்டட்
5. லங்கா அசோக் லேலண்ட் லிமிட்டட்
6. வரையறுக்கப்பட்ட இலங்கை சீமெந்துக் கம்பனி
7. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
8. மாந்தை சோல்ட் லிமிட்டட்
9. ஆனையிறவு உப்பளம்
10. லங்கா ரெக்ஸ்ரைல் மில்ஸ் எம்போரியம் லிமிட்டட்
11. லங்கா சலுசல லிமிட்டட்
12. தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை
13. தேசிய அருங்கலைப் பேரவை
14. இலங்கை கைவினைக் கைத்தொழில் சபை (லக்சல)
15. தேசிய வடிவமைப்பு நிலையம்
16. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி மூலதனக் கம்பனி
17. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் அதிகாரசபை
18. வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம்

### *நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவகச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) தேசிய அருங்கலைப் பேரவை மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
- (2006 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்
- (2009 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவனச் சட்டம்
- (1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) புடவைப் பங்குச் சபைச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(7) கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர்** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 8. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | 19. இலங்கை கனிய மணல் கம்பனி<br>20. வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி | |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | 21. போகல கிராபைட் லங்கா லிமிட்டட்<br>22. லங்கா பீங்கான் கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடுகள் பிரிவு)<br>23. வரையறுக்கப்பட்ட கஹகொல்ல பொறியியல் சேவைகள் கம்பனி (KESCO)<br>24. வரையறுக்கப்பட்ட பீ.சீ.சீ. கம்பனி | |

**(8) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 1. பெருந்தோட்டக் கைத்தொழில் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்<br>2. தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்<br>3. இலங்கை தேயிலைச் சபை<br>4. சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை | • (1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகச் சட்டம்<br>• (1970 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை தேயிலைச் சபைச் சட்டம்<br>• (1953 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டம் |
| 2. பெருந்தோட்டப் பயிர்களின் அறுவடையை அதிகரிப்பதற்காக வேண்டிய இணைந்த ஏனைய வசதிகளை ஏற்படுத்தல் | 5. தேயிலை, இறப்பர் தோட்டங்கள் (கட்டுப்பாட்டு, பிரித்தொதுக்குதல்) சபை<br>6. தேயிலை சக்தி நிதியம் | • (1930 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க) இறப்பர் ஆராய்ச்சி சபைக் கட்டளைச் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டம் |
| 3. பெருந்தோட்டக் கைத்தொழில் துறையின் உற்பத்தித்திறனை ஏற்படுத்துவதற்காக சர்வதேச போட்டியினை அதிகரித்தல் | 7. துருசவிய நிதியம்<br>8. தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்<br>9. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்<br>10. தெங்கு பயிரிடல் சபை | • (1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு) சட்டம்<br>• (1958 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் (கூறுபோடுதலை கட்டுப்படுத்துதல்) சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(8) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

4. பெருந்தோட்டப் பயிர்களின் அடிப் படையிலான சேர்பெறுமதியை அதிகரிப்பது தொடர்பான கைத் தொழில்களை முன்னேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தல்
5. தேயிலை, இறப்பர் என்பன தொடர் பில் உரிமம் வழங்கல்
6. தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்
7. தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங் களைப் பிரித்தொதுக்கல் தொடர்பில் அனுமதிப்பத்திரம் வழங்கலும் கட்டுப்படுத்தலும்
8. பல்பயிர் செய்கைகள், கூட்டுப் பண்ணை முறைகளினூடாக பெருந் தோட்டக் காணிகளை உயர்ந்த மட்டத்தில் பயன்படுத்திக் கொள்ள லும், அதன்மூலம் உற்பத்தியையும் தொழில்வாய்ப்பையும் அதிகரித்தல்
9. தேயிலை, இறப்பர், தெங்கு கைத்தொழில்களின் அபிவிருத்தியும் ஊக்குவிப்பும் ஆராய்ச்சிகளுடன் தொடர்பான அலுவல்களும்
10. சீனிக் கைத்தொழிலுக்குரிய அரச வளங்களின் முகாமைத்துவமும் பாதுகாப்பும்
11. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும்
12. நிரல் II இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

11. தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
12. தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்
13. வரையறுக்கப்பட்ட களுபோவிட்டியன தேயிலைத் தொழிற்சாலை
14. இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம்
15. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை
16. இலஙகை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
17. வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந் தோட்டக் கம்பனி
18. வரையறுக்கப்பட்ட குருநாகல் பெருந் தோட்டக் கம்பனி
19. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந் தோட்டக் கம்பனி
20. கல்ஓயா பெருந்தோட்டக் (தனியார்) கம்பனி
21. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனம்
22. வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனிக் கைத்தொழில் கம்பனி
23. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
24. கந்தளாய் சீனிக் கம்பனி
25. கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்*

- (1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம்
- (2000 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க) தேயிலை சக்தி நிதியச் சட்டம்
- (1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) தேயிலை சிறு பற்று நிலங்கள் அபிவிருத்திச் சட்டம்
- (1958 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) தேயிலை உதவுதொகைச் சட்டம்
- (2000 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க) துரு சவிய நிதியச் சட்டம்
- (1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க) தேயிலை ஆராய்ச்சி சபை சட்டம்
- (1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க) தெங்கு பயிர்ச்செய்கை சபைச் சட்டம்
- (1984 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க) தெங்கு அபிவிருத்திச் (விசேட ஏற்பாடு) சட்டம்
- (1971ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க) தெங்கு அபிவிருத்திச் சட்டம்
- (1967 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தென்னை நார்ச் சட்டம்
- (1935 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க) தெங்கு உற்பத்திப் பொருட்கள் கட்டளைச் சட்டம்
- (1950 ஆம் ஆண்டின் 37ஆம் இலக்க) தென்னை ஆராய்ச்சி சபைச் சட்டம்
- (1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க) கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**(9) நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும்* |
| 1. நகரத் திட்டமிடல், நீர்வழங்கல், முஸ்லிம் சமய அலுவல்கள் ஆகிய விடயங்கள் மற்றும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும் | 1. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபை | • தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபைச் சட்டம் (1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க) |
| 2. விசேட நகரத் திட்டமிடுகையும் அபிவிருத்தியும் | 2. தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம் | • (1956 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க) முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்பு சட்டம் |
| 3. நகர அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்வதற்காக தேசிய பௌதீக திட்டங்களின் அடிப்படையில் சகல நிர்மாணப் பணிகளைச் செயலாட்சி செய்தலும் செயற்படுத்தலும் | 3. முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 4. சகல பிரசைகளுக்கும் சுத்தமான குடிநீர் பெற்றுக்கொடுப்பதை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | |
| 5. நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள், துப்புரவேற்பாட்டு வசதிகள் குறித்த ஆய்வு, திட்டமிடுகை, உருவாக்குதல், நிர்மாணித்தல், நெறிப்படுத்துகை மற்றும் பராமரிப்பு | | |
| 6. சமுதாய நீர்வழங்கல் சேவைகள் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டங்களை வினைத்திறனாகவும் விதிமுறையாகவும் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(9) நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
| 7. ஒழுக்கப்பண்பான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மதப் பெறுமானங்களை மக்கள் மத்தியில் விருத்தி செய்வதற்காகக் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல் | | |
| 8. முஸ்லிம் சமய அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் தொடராய்வும் | | |
| 9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள் | | |
| 10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

***(10) வர்த்தக, நுகர்வோர், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்***

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
| 1. வர்த்தக, நுகர்வோர், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடலும் | 1. கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்<br>2. கம்பனிப் பதிவாளர் திணைக்களம்<br>3. இலங்கை புலமைச்சொத்துக்கள் பணியகம்<br>4. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை<br>5. நுகர்வு அலுவல்கள் பற்றிய அதிகார சபை | • (1987 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க) வியாபாரப் பெயர்கள் சட்டம்<br>• (2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க) கம்பனிகள் சட்டம்<br>• (2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) புலமைச் சொத்துக்கள் சட்டம்<br>• வியாபாரச் சின்னங்கள் சட்டம் (1964 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க)<br>• (1935 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க) சீட்டுக் கட்டளைச் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***(10)* வர்த்தக, நுகர்வோர், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

2. ஒழுக்கப்பண்பான சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மதப் பெறுமானங்களை மக்கள் மத்தியில் விருத்தி செய்வதற்காகக் கொள்கைகள், நிகழச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், தொடராய்வு செய்தல், மதிப்பிடுதல்

3. கிறிஸ்தவ மத அலுவல்கள் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்படுத்துகையும் தொடராய்வும்

4. உள்நாட்டுச் சந்தையில் நுகர்வுப் பொருட்களை உயர்பண்புத் தரம் கொண்டதாகவும், பற்றாக்குறை இல்லாமலும் நியாயமான விலைக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

5. 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஈட்டுச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அனுமதித்தல்

6. நுகர்வுப் பண்டங்கள் சார்ந்த தேசிய விலைக் கொள்கைகளை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்

7. நுகர்வோர் பாதுகாப்புக்காக நடவடிக்கைகளை எடுத்தல்

8. புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச சமவாயத்தை நிருவகித்தல் பற்றிய கருமங்களின் வெளியீட்டு உரிமை மற்றும் உலகப் புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் வெளியீட்டு உரிமை தொடர்பான கருமங்கள்

9. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்குரியதான செயற்பாடுகள்

10. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல்

*நிரல் II*

*திணைக்களங்களும்*
*அரச கூட்டுத்தாபனங்களும்*
*நியதிச்சட்ட நிறுவனங்களும்*

6. வரையறுக்கப்பட்ட லங்கா சதொச

7. வரையறுக்கப்பட்ட லங்கா ஜெனரல் டிரேடிங் கம்பனி

8. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்

9. அளவுக்கூறுகள் கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம்

10. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (கூட்டுறவு சங்கப் பதிவாளர்)

11. கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு

12. உள்ளக வர்த்தகத் திணைக்களம்

13. தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய*
*சட்டங்களும் சட்டவிதிகளும்*

- பொது ஒப்பந்த உடன்படிக்கை சட்டம் (1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க)
- (2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்
- (1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
- (1949 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனச் சட்டம்
- (1972 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க) கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சட்டம்
- (1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்
- (1961 ஆம் ஆண்டின் 62 ஆம் இலக்க) வியாபாரிகளுக்கு உரிமமளித்தல் சட்டம்
- (1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க) அளவீட்டுக்கூறு நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம்
- (2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க) தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம்
- (1980 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) இலங்கைச் சந்தைப்படுத்தல் நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டம்
- (1946 ஆம் அண்டின் 37 ஆம் இலக்க) நிறுவைகள், அளத்தல்கள் கட்டளைச் சட்டம்
- வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும்